(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 132.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011 நவெம்பர் 08, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0943/ '10

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, முலட்டியன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கையையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகளையும்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1000/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் (E.T.F.) இதுவரை வைப்புச் செய்துள்ள பணம் எவ்வளவென்பதையும்;

(ii) இதில் அங்கத்துவம் பெற்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையையும்;

(iii) அங்கத்தவர்களின் பணத்திற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பணத்தை அங்கத்தவர்களுக்கு மீளச் செலுத்தும் 5 வருட கால எல்லையானது அதைவிட நீண்ட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதா,

(ii) இன்றேல், அத்தகைய கால நீடிப்புக்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(iii) மேற்படி (i) அல்லது (ii) மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை,

(iv) இதன்பொருட்டு தொழில் ஆலோசனை மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) குறுகியகாலத் தேவைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பணத்தைப் பாவிக்கின்ற ஊழியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்காக வழங்கப்படும் தீர்வு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1225/ '11

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1619/11

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு ஆசனிக் அடங்கிய விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்தல் நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்நாட்டுச் சந்தையில் ஆசனிக் அடங்கிய விவசாய இரசாயனப் பொருட்கள் இருப்பதாக அண்மையில் வெளிவந்த அறிக்கைகள் தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்:

(ii) விவசாய இரசாயனப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் போது அவற்றைப் பரிசோதிக்கும் செயல்முறை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1014/ '10

5.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக இலங்கையின் புகழுருவை உலகில் பிரச்சாரம் செய்வதற்காக குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அப்பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் பிரகாரம் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்த பிரச்சார நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அந்த நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களில் "பெல்பொடெஞ்சர்" எனும் பிரித்தானிய கம்பனியொன்று மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரச்சாரத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள சேவைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகையும் ஒவ்வொரு பணிக்காக செலுத்தப்பட்ட பணத்தொகைகளும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1227/ '11

6\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக விளையாட்டுத்துறை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1278/ '11

7\.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் அகுரெஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் போபகொட "சுரம்யா" இல்லத்தில் வதியும் திருமதி. தயாவதி ஹெட்டியாரச்சிக்கு சொந்தமான மாரம்ப பெத்தபிட்டிய – வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வலகந்தவத்த எனும் தேயிலை பயிர்செய்கைக் காணியில் பத்து வருடங்களுக்கு முன்னர் சுமார் நான்கு பர்சஸ் அளவிலான காணித்துண்டொன்றில் நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் பிரிவினால் நில்வலா கங்கையின் நீர் அளவைப் பணிகளுக்கெனக் கூறி ஒரு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இற்றைவரை மேற்படி கோபுரத்திலிருந்து எவ்வித பயனும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இக்கோபுரத்தை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்கு எவ்வித நட்டஈடோ அல்லது குத்தகைப் பணமோ இதுவரை உரிமையாளருக்கு வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நீர் அளவைக் கோபுரத்தின் நடவடிக்கைகளை இடைநடுவே நிறுத்தியமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிக்காக திருமதி தயாவதிக்கு நட்டஈட்டினை செலுத்துவதற்கு அல்லது நிர்மாணப் பணிகள் இடம்பெறாத பட்சத்தில் இக்காணியை மீளப்பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) நட்டஈடு வழங்கப்படுமாயின் அத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1620/ '11

8.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு ஜுன் மாதமளவில் மத்திய வங்கிக்கு சொந்தமாயிருந்த தங்கத்தின் அளவு எவ்வளவு;

(ii) 2010ஆம் ஆண்டு ஜுன் முதல் 2011 ஆம் ஆண்டு ஜுன் வரை கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(iii) தங்கம் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவை கொள்வனவு செய்யப்பட்ட விதம் யாது;

(iv) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின் விலைகள் யாது;

(v) தங்க விற்பனையின் பொருட்டு பின்பற்றப்பட்ட நடைமுறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1015/ '10

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் ஆண்டுக்காக நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்தப் பணத் தொகையில் கிராமிய வீடுகள், அரசாங்க வீடுகள், மாடிவீடுகள் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீடமைப்புத்திட்டங்களுக்கு பலதரப்பட்ட நாடுகளிலிருந்து கடன் அல்லது நிதி உதவிகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் கடன் அல்லது நிதி உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் வழங்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1230/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1280/ '11

11.

கௌரவ புத்திக பதிரண,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் "தர்சன" கப்பரதொட்ட எனும் முகவரியில் வதியும் திரு. எஸ். ரீ. கே. ஜயவீரவின் வீட்டுக்கும், வீட்டுத் தளபாடங்களுக்கும் 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியின் காரணமாக சேதம் ஏற்பட்டது என்பதையும்;

(ii) இச் சேதத்திற்காக நட்டஈட்டுத் தொகையினையோ புதிய வீடொன்றையோ பெற்றுத்தருமாறு இவர் சுமார் ஆறு வருடங்களாக சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் கோரிக்கை விடுத்தாலும் இதுவரையிலும் அது நிறைவேற்றப்படவில்லை என்பதால் இவர் கடும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேதத்திற்கு உள்ளான இவரது வீட்டை மறுசீரமைப்பதற்காக நட்டஈட்டுத் தொகையினை அல்லது வேறொரு இடத்தில் புதிய வீடொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1621/'11

12.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் தற்போதைய உயர்மட்ட உத்தியோகத்தர் சபையிலும் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுபவர்கள் யாவர்;

(ii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் சம்பள அளவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 5.6 பில்லியன் சொத்துக்கள் நிலுவை காணப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல்,— இனங்காணப்பட்ட செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளை அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை, தேசிய நலன்கருதி அரசுக்குரித்தாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய செயற்படு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளுள் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுள் ஒன்றோ பலவோ தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமிப்பதற்கும்; மாற்றுப் பயன்பாடு மூலமும் மற்றும் அது தொடர்பில் நட்டஈடு செலுத்துதல் மூலமும் அவற்றின் பயனுள்ள முகாமைக்கும், நிருவாகத்துக்கும் அல்லது புத்துயிரளிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நாடு, நகரத் திட்டமிடல் (திருத்தம்),— (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தம்),— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2011 நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 23 ஆம் திகதி புதன்கிழமை, 24 ஆம் திகதி வியாழக்கிழமை, 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 28 ஆம் திகதி திங்கட்கிழமை, 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 30 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ( 2 012)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2011 நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் நவெம்பர் மாதம் 29 ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.00 முதல் பி.ப. 6.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2012)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2011 நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணிவரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

7.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“ த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விதிக்கப்பட்டு 2011ஓகத்து மாதம் 04 ஆம் திகதிய 1717/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 141, 143, 144, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 03 ஆந் திகதிய 1717/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 19 மற்றும் 157அ ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 1718/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பாராளுமன்ற சபை முதல்வர்,— 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம், 17 தினங்களாக மாத்திரமே அமைவதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக நாளொன்றுக்கு சுமார் 7 ½ மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரே தினத்தில் பல்வேறு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க ஒரு செலவுத் தலைப்பிற்காக சுமார் 2 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ளமையாலும், அதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சிலும் செலவுத் தலைப்புக்களை தயாரிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வரையறுக்கப்பட்டுள்ளமையாலும், பாராளுமன்றத்தின் அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் பாராளுமன்ற அலுவலகள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்ட 21 அமைச்சுக்களினதும் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக, வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் தொடங்கிய தினத்தில் இருந்து, அதாவது 2011.11.22 ஆம் திகதி முதல் 2011.11.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள்ளே கூடிக் கலந்துரையாடத்தக்க வகையில் தெரிகுழுவொன்று தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது அரசாங்கக்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

   (ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும் அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**இணைப்பு**

1. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சு
2. நகர அலுவல்கள் அமைச்சு
3. நுகர்வோர் நலன்புரி அமைச்சு
4. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சு
5. கிராமிய அலுவல்கள் அமைச்சு
6. தேசிய வளங்கள் அமைச்சு
7. மனித வளங்கள் அமைச்சு
8. சமூக நலன்புரி அமைச்சு
9. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு
10. உணவுப் பாதுகாப்பு அமைச்சு
11. பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
12. அராசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
13. வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு
14. தபால் சேவைகள் அமைச்சு
15. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
16. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
17. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
18. சமூக சேவைகள் அமைச்சு
19. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
20. சிவில் விமான சேவைகள் அமைச்சு
21. தொழல்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு

7.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

8.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

9.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

* 11.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தம்) — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 17.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

29.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0944/ '10

1.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, வெலிகம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0945/ '10

2.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, பஸ்கொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0946/ '10

3.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, கொட்டபொல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0947/ '10

4.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, திக்வெல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0948/ '10

5.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, தெவிநுவர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0949/ '10

6.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் முல்லட்டியன வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, திஹகொட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0950/ '10

7.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்கரஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, மாலிம்பட கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0951/ '10

8.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் முல்லட்டியன வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, ஹக்மன கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0952/ '10

9.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, கம்புறுபிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப் படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப் பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0953/ '10

10.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, அக்குரஸ்ஸ கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0954/ '10

11.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, வெலிப்பிட்டிய கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0955/ '10

12.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தெனியாய வலயக் கல்விக் காரியாலயத்திற்குச் சொந்தமான, மொறவக்க கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரச பாடசாலைகளில்,

(i) கட்டடங்களுக்கான தேவை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) துப்புரவேற்பாட்டு வசதிகளற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் கல்வியில் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான அபிவிருத்தி ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நிதியை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?